


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 03 | Issue: 5 | 4 Pages | 5.8.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

லர்: 03 | இதழ்: 5 | 4 பக்கங்கள் | 5.8.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**

**வான நணிய துடைத்து**

**விளக்கம்:**

**ஐயத்திலிருந்து நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்க்கு அடைந்துள்ள இவ்வுலகை விட அடைய வேண்டிய மேலுலகம் அண்மையில் உள்ளதாகும்.**

## 2 ரூபாய்க்கு சிகிச்சை அளித்த டாக்டர் மரணம்: முதல்மந்திரி இரங்கல்



கண்ணூர், ஆக. 5

கேரளாவின் கண்ணூரைச் சேர்ந்தவர் ஏ.கே. ரைரு கோபால். மருத்துவரான இவர், ஏழைகளுக்கு உதவும் பொருட்டு வெறும் ரூ.2 மட்டுமே வாங்கி கொண்டு அவர்களுக்கு சிகிச்சை அளித்து வந்தார். இது, அவருக்கு நீடித்த புகழையும், புனைபெயரையும் பெற்று தந்தது. 81 வயதான நிலையிலும் அவர் அந்த பகுதி மக்களுக்கு மருத்துவம் பார்த்து வந்தார்.

நோயாளி ஒருவரின் வீட்டுக்கு சென்று சிகிச்சை அளித்தபோது, அங்கு அவர் காணப்பட்ட ஏழ்மை நிலைமையை கண்டு அன்று முதல் மருத்துவம் பார்க்க 2 ரூபாய் கட்டணமாக பெற முடிவு செய்து தொடர்ந்து மருத்துவ சேவையில் ஈடுபட்டு வந்தார்.

இவர், தினமும் 300 பேருக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பாராம். இதற்காக அவருக்கு மனைவி சகுந்தலா உதவியாக இருந்துள்ளார்.இப்படி 50 ஆண்டுகளுக்கும் மேலாக மருத்துவ சேவை ஆற்றி வந்த ஏ.கே.ரைரு கோபால் வயோதிகம் காரணமாக உடல்நிலை குன்றிய நிலையிலும் தன் மருத்துவ சேவையை நிறுத்தாமல் தொடர்ந்து செய்து வந்தார். இதனால் அவர் 'மக்கள் மருத்துவர்' என்று போற்றப்பட்டார்.

இந்தநிலையில் நேற்று டாக்டர் ஏ.கே.ரைரு கோபால் மரணம் அடைந்தார். இதனால் அவரது குடும்பத்தினர் மட்டுமின்றி அனைவரும் சோகத்தில் வாடியுள்ளனர். மேலும் அவரது மரணத்திற்கு கேரள முதல்மந்திரி பினராயி விஜயன் உள்பட அரசியல் தலைவர்கள் மற்றும் பலரும் மருத்துவத்துறைக்கு பேரிழப்பு என்று இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## சிறுமியுடன் பழக்கம்.. புகைப்படத்தை வாட்ஸ்அப் ஸ்டேட்டஸ் வைத்த ஐ.டி.ஐ. மாணவர் அடுத்து நடந்த கொடூரம்



பல்லாரி, ஆக. 5

பல்லாரி (மாவட்டம்) டவுன் பகுதியை சேர்ந்தவர் தொட்ட பசவா (வயது 19). இவர், ஐ.டி.ஐ.யில் படித்து வருகிறார். கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியின் போது 18 வயது நிரம்பாத சிறுமியுடன் தொட்ட பசவாவுக்கு பழக்கம் ஏற்பட்டு இருந்தது. அப்போது சிறுமியுடன் சேர்ந்து அவர் புகைப்படம் எடுத்திருந்தார். அந்த புகைப்படத்தை தனது வாட்ஸ்அப் ஸ்டேட்டசில் தொட்ட பசவா வைத்திருந்தார்.இதுபற்றிஅந்தசிறுமியின்அண்ணனுக்குதெரியவந்தது. உடனே அவர் ஆத்திரமடைந்தார். பின்னர் ஐ.டி.ஐ.க்கு தனது நண்பர்களுடன் சிறுமியின் அண்ணன் சென்றார். அங்கு மைதானத்தில் வைத்து தனது தங்கையின் புகைப்படத்தை வாட்ஸ்அப் ஸ்டேட்டசில் வைத்தது குறித்து தொட்ட பசவாவுடன் அவர் சண்டை போட்டார்.

இதனையடுத்து ஆத்திரமடைந்த சிறுமியின் அண்ணன் உள்பட 10 பேர் சேர்ந்து தொட்ட பசவாவை கண்மூடித்தனமாக தாக்கினார்கள். கிரிக்கெட் மட்டை, இரும்பு கம்பியாலும் அவரை தாக்கினார்கள். தன்னை விட்டு விடும்படி அவர்கள் காலில் விழுந்து கெஞ்சியும் தொட்ட பசவா மீது அவர்கள் தாக்குதல் நடத்தினார்கள். இதில், அவருக்கு பலத்தகாயம் ஏற்பட்டது. இதுகுறித்து பல்லாரி டவுன் போலீசார், சிறுமியின் அண்ணன் உள்பட 10 பேர் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர். வழக்குப்பதிவான நபர்களில் பலர் மாணவர்கள் ஆவார்கள். அதே நேரத்தில் தொட்ட பசவாவை 10 பேர் சேர்ந்து தாக்கும் வீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஜாலியாக வலம் வரலாம் என்று கூறி கல்லூரி மாணவியை காரில் கடத்தி பலாத்காரம்



சோழதேவனஹள்ளி, ஆக. 5

கர்நாடக மாநிலம் பெங்களூரு சோழதேவனஹள்ளிபோலீஸ்எல்லைக்கு உட்பட்ட எசருகட்டா மெயின் ரோட்டில் பெண்களுக்கான தங்கும் விடுதி உள்ளது. இதன் உரிமையாளர் அஷ்ரப் (வயது 37) ஆவார். அந்த தங்கும் விடுதியில் கடந்த 10 நாட்களுக்கு முன்பாக தான் ஒரு கல்லூரியில் படிக்கும் மாணவி அறை எடுத்து தங்க தொடங்கினார்.

இதனால் அஷ்ரப், மாணவி இடையே பழக்கம் ஏற்பட்டது. கடந்த 1ந் தேதி இரவு விடுதி முன்பாக மாணவி நின்று கொண்டிருந்ததாக தெரிகிறது. அப்போது அங்கு காரில் வந்த அஷ்ரப் ஜாலியாக வலம் வரலாம் என்று மாணவியை அழைத்ததாக கூறப்படுகிறது. அதன்படி, அஷ்ரப்புடன் மாணவி சென்றுள்ளார். பின்னர் ஆள்நடமாட்டம் இல்லாத பகுதிக்கு மாணவியை அழைத்து சென்று, அவரை அஷ்ரப் கற்பழித்ததாக கூறப்படுகிறது.

இதுபற்றி சோழதேவனஹள்ளி போலீஸ் நிலையத்தில் மாணவி புகார் அளித்தார். அதன்பேரில், போலீசார், மாணவியை காரில் கடத்தி சென்று கற்பழித்ததாக வழக்குப்பதிவு செய்து தங்கும் விடுதி உரிமையாளரான அஷ்ரப்பை கைது செய்துள்ளனர். அவரிடம் போலீசார் தீவிர நடத்தி வருகின்றனர்.

அதே நேரத்தில் அரசு மருத்துவமனையில் மாணவிக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதாகவும், அறிக்கை கிடைத்த பின்பு அடுத்தகட்டநடவடிக்கைஎடுக்கப்படும்என்றும்சோழதேவனஹள்ளி போலீசார் தெரிவித்துள்ளனர்.

# வங்காள மொழி அவமதிப்பு: மம்தா பானர்ஜி தக்க பதிலடி தருவார் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆக. 5

வங்காள மொழியினை 'வங்கதேச மொழி' எனக் குறிப்பிட்டது, நாட்டுப்பண் இயற்றப்பட்ட வங்க மொழிக்கு நேரடி அவமதிப்பு என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

டெல்லி காவல்துறை வங்காள மொழியினை 'வங்கதேச மொழி' எனக் குறிப்பிட்டது, வங்க மொழிக்கு இழைக்கப்பட்டுள்ள நேரடி அவமதிப்பு என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

மத்திய உள்துறை அமைச்சரவையின்கீழ் இயங்கும் டெல்லி காவல்துறையானது வங்காளமொழியினை 'வங்கதேச மொழி' எனக் குறிப்பிட்டிருக்கிறது. இது நம் நாட்டுப்பண் இயற்றப்பட்ட வங்க மொழிக்கு இழைக்கப்பட்டுள்ளநேரடிஅவமதிப்பாகும்.

இத்தகைய அறிக்கைகள் தெரியாமல்நிகழ்ந்தபிழையோதவறோ அல்ல. இந்தியாவின் பன்மைத்துவத்தைத் தொடர்ந்து சிறுமைப்படுத்தி, ஒருவரது அடையாளத்தைக் கொண்டு தாக்கும் ஆட்சியின் கோர மன நிலையைத்தான் இவை அம்பலப்படுத்துகின்றன.



இந்தி அல்லாத மொழிகளின் மீது இத்தகைய தாக்குதல் தொடுக்கப்படும் நேரத்தில், மேற்கு வங்க மாநிலத்தின் மொழியையும் மக்களையும் காக்கும் அரணாகச் சகோதரி மம்தா பானர்ஜி திகழ்கிறார். இந்தத்தாக்குதலுக்குத்தக்கபதிலடி தராமல் அவர் ஓயமாட்டார். இவ்வாறுஅதில்தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் சிறுபான்மையின மக்களுக்கான ஆட்சி நடைபெற்று வருகின்றது சிறுபான்மை இன மக்களுக்கு ஆதரவாக இருக்கும் கட்சிகளுக்கே தேர்தலில் எங்கள் ஆதரவு இருக்கும்தென்னிந்திய திருச்சபை பேராயர்

தமிழகத்தில் சிறுபான்மையின மக்களுக்கான ஆட்சி நடைபெற்று வருகின்றது

சிறுபான்மை இன மக்களுக்கு ஆதரவாக இருக்கும் கட்சிகளுக்கே தேர்தலில் எங்கள் ஆதரவு இருக்கும்தென்னிந்திய திருச்சபை பேராயர்

(சிஎஸ்ஐ) தென்னிந்திய திருச்சபை சென்னை பேராயத்தின் 14 ஆவத பேராயராக நேற்று பொறுப்பேற்ற அருள்திரு பால் பிரான்சிஸ் சென்னை கேத்திட்டல் சாலைகள் உள்ள அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்,



சென்னை பேரராயம் 25 தாய் பேராயங்களுக்கு தலைமையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, 14 ஆவது பேராயராக நேற்று பொறுப்பேற்று இன்று அலுவலர்களுடன் பணியில் சேர்ந்து இருக்கிறேன்,

மூன்று லட்சம் உறுப்பினர்கள் கொண்ட எங்கள் சென்னை பேராயத்தில் கல்வி நிலையங்கள் மருத்துவமனைகள் கல்விக் கூடங்கள் கல்லூரிகள் ஆலயங்கள் இவற்றில் இருக்கக்கூடிய சவால்களை எதிர்கொள்வது தான் எங்களது மிக முக்கியமான நோக்கமாக இருக்கிறது,

ஒரு அமைப்பு அல்லது நிர்வாகம் என்றாலோ பல்வேறு கருத்துக்கள் எதிர்ப்புகள் இருக்கத் தான் செய்யும் தற்போது நாங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளோம் எப்பொழுதும் எங்கள் அலுவலக கதவுகள் திறந்தே இருக்கும் யாருக்கு எந்த நேரத்தில் எந்த பிரச்சனை குறித்தும் தெரிவிக்கலாம் கருத்துக்களையும் தெரிவிக்கலாம் அதில் இதெல்லாம் சரி செய்ய முடியுமோ அதனை நாங்கள் நிச்சயம் சரி செய்வோம் நாட்டில் சிறுபான்மை இன மக்கள் சந்தித்து வரும் பிரச்சனைகள் குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர்


சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகள் மட்டுமல்லாது அனைத்து தரப்பு மக்களின் பிரச்சினைகளுக்கும் நாங்கள் குரல் கொடுக்கின்றோம். குறிப்பாக தற்போது ஆணவக் கொலை செய்யப்பட்டுள்ள கவின் அவர்கள் மரணத்திற்கும் லாக்கப் மரணம் அடைந்த அஜித் குமாரின் சம்பவத்திற்கும் நாங்கள் எங்கள் கண்டனத்தை பதிவு செய்துள்ளோம் அதுமட்டுமல்லாது தற்போது கன்னியாஸ்திரிகள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து இருப்பதையும் நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக எங்கு எந்த நிகழ்வுகள் நடந்தாலும் அதனை நாங்கள் வன்மையாக கண்டிப்போம்

தற்போது தமிழகத்தில் சிறுபான்மையின மக்களுக்கான ஆட்சி நடைபெற்று வருகின்றது

வருகின்ற தேர்தலில் யார் யாருடன் கூட்டணி இருப்பார்கள்என்பதெல்லாம்இன்னும்முடிவு செய்யப்படவில்லை எதுவாக இருந்தாலும் சிறுபான்மையினமக்களுக்கு ஆதரவாகசெயல்படும் கட்சிக்குதான் எங்கள் ஆதரவு இருக்கும் தேர்தல் நேரத்தில் எங்களது முடிவுகளை தெரிவிப்போம்

## டெங்கு ஒழிப்பு திட்டத்திற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஜே.எம்.ஜே மீடியா pvt(Ltd)ஏற்பாட்டில் வெற்றிகரமாக இடம்பெற்றது

"ஜே.எம்.ஜே. மீடியா (PVT LTD) ஏற்பாட்டில் ஜூலை 31 வரை நடைபெற்ற டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்திற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று வெற்றிகரமாக நிறைவு பெற்றது.



இந்த நிகழ்வில் சர்வதேச ரீதியாக கலந்து கொண்டவர்ளுக்கு அவர்களின் சமூக சேவையை பாராட்டி இச்சான்றிதழ்கள்வழங்கப்பட்டது.


ஒரு கொடிய வைரஸ் நோயான டெங்கு ஏடிஸ் வகை நுளம்புகளினால் பரப்பப்படுகின்றது. இந் நுளம்புகள் தண்ணீர் தேங்கி நிற்கின்ற இடங்களான பழைய குடிநீர் தொட்டிகள், பிளாஸ்டிக் குடங்கள் மற்றும் பழைய டயர்கள் போன்றவற்றில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கின்றன.

அந்த வகையில் மனித உயிர்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் இந்நுளம்புகள் பெருகும் இடங்களை அழிக்கும் செயற்திட்டம் ஜே.எம். ஜே. மீடியா (PVT LTD) நிறுவனத்தின் பணிப்பாளர் ஜஸுரா ஜலீலின் வழிகாட்டுதலிலும், உலகளாவிய ஒருங்கிணைப்பாளர்களின் ஏற்பாட்டிலும் உலகின் பல இடங்களிலும் இடம்பெற்றிருந்தது.

அத்துடன் இந்நிகழ்வில் டெங்கு நுளம்புகளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டதுடன், இதிலிருந்து மக்கள் எவ்வாறு தம்மை பாதுகாத்துக் கொள்வது தொடர்பிலும் விளக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் டெங்கு ஒழிப்பு தனி ஒரு நபர் அல்லது அரசாங்கத்தினால் மட்டும் செய்து முடிக்கக்கூடிய செயற்திட்டம் அல்ல எனவும் இது அனைத்து குடிமக்களின் பொதுப் பொறுப்பாகும் எனவும், நாம் அனைவரும் விழிப்புடன் ஒன்றுபட்டு செயற்பட்டால் டெங்கு எனப்படும் இக் கொடிய நோயினை ஒழிக்க முடியும் எனவும் கருத்துக்கள் மக்கள் மத்தியில் முன் வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாணவர்கள், பொது மக்கள் மற்றும் பல துறைகளை சேர்ந்த நபர்கள், சமூக நலன் விரும்பிகள் என பலரும் ஆர்வத்தோடு கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.




## வேன் மோதி முதியவர் பலி மக்கள் சாலை மறியல் போராட்டம்

கடலூர், ஆக. 5

கடலூர் மாவட்டம் வேப்பூர் கழுத்தூர் பகுதியில் அண்ணாமலை என்கிற முதியவர் சாலையை கடக்க முயன்றார். அப்போது சாலையில் வந்துகொண்டிருந்த வேன் ஒன்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து முதியவர் மீது மோதியது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயேஅவர்பரிதாபமாகஉயிரிழந்தார்.

கடலூர் மாவ்வட்டத்திலேயே வேப்பூர் பகுதியில் தான் அதிகளவு விபத்துக்கள் நடக்கின்றன. தொடர் விபத்துக்களை தடுக்க இந்த பகுதியில் ஒரு மேம்பாலம் வேண்டும் என்று ஒவ்வொறு முறை விபத்து நடக்கும் போதும் அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்திருந்தனர்.


அவர்களின் கோரிக்கைக்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தினால் அப்பகுதி மக்கள் அதிக அளவில் கூடி சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர் தூரம் வாகனங்கள் அணிவகுத்து நின்றன.

இதனால் தேசிய நெடுஞ்சாலையில் கடும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. பலமுறைகோரிக்கை வைத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததே இந்த சாலை விபத்திற்கு காரணம் என கூறி அப்பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

# திருப்பத்தூர்: சிறுமியை கர்ப்பமாக்கிய சிறுவன் போக்சோவில் கைது

திருப்பத்தூர், ஆக. 5

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியை அடுத்த உதயேந்திரம் சுப்புராயன் கோவில் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுவனுக்கு, அரசுப் பள்ளி ஒன்றில் படித்து வந்த 15 வயது சிறுமியுடன் பழக்கம் ஏற்பட்டு அடிக்கடி சந்தித்து பேசி வந்துள்ளனர். அப்போது சிறுமியை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைகள் கூறி உல்லாசமாக இருந்துள்ளார். இதில் சிறுமி கர்ப்பமானார்.




இதையறிந்து அதிர்ச்சிக்குள்ளானசிறுமியின் பெற்றோர் வாணியம்பாடி அனைத்து மகளிர் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் சிறுவனை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் சிறுமியிடம் உல்லாசமாக இருந்து வந்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து சிறுவனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆடுகளை கடித்து குதறிய மர்ம விலங்கு பொதுமக்கள் அச்சம்

கன்னியாகுமரி ஆக். 5

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் அருகே உள்ள புத்தன்கடை புதுக்கோடு பகுதியை சேர்ந்தவர் நெல்சன் (68 வயது), கூலி தொழிலாளி. இவர் தனது வீட்டின் பின்புறம் ஒலைக்கொட்டகை அமைத்து 3 ஆடுகளை வளர்த்து வந்தார். தினமும் இரவு ஆடுகளுக்கு உணவு கொடுத்து விட்டு ஒலை கொட்டகையில் கட்டி விடுவது வழக்கம். இது போல் நேற்று இரவும் ஆடுகளை கட்டி வைத்து விட்டு தூங்க சென்றார்.

இந்த நிலையில் இன்று காலையில் எழுந்து ஆடுகளுக்கு உணவளிக்க கொட்டகைக்கு வந்தபோது அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு கட்டியிருந்த 3 ஆடுகளும் இறந்து கிடந்தன. அவற்றின் வயிற்றில் ஏதோ மர்ம விலங்கு கடித்ததற்கான பெரிய காயங்கள் இருந்தன. நெல்சனின் வீட்டின் அருகே சிறிய மலைக் குன்று உள்ளது. அங்கிருந்து இறங்கி வந்த ஏதோ மர்ம விலங்கு ஆடுகளை கடித்து கொன்றிருக்கலாம் என கூறப்படுகிறது.



மேலும் இதுகுறித்து அவர் வனத்துறையினருக்கு தகவல் கொடுத்தார். உடனே வன அலுவலர் பாலமோகன் தலைமையிலான ஊழியர்கள் ராஜகோபால், ஹரிஹரன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பார்வையிட்டனர். அப்போது ஒலை கொட்டகையின் அருகே குவித்து வைத்திருந்த மணலில் மர்ம விலங்கின் கால்தடம் பதிந்து இருந்ததை கண்டு, அதனை பதிவு செய்தனர். இது செந்நாய் அல்லது மரநாயின் கால் தடமாக இருக்கலாம் என வனத்துறையினர் தெரிவித்தனர்.

மக்கள் அதிகம் உள்ள குடியிருப்பு பகுதியில் மர்ம விலங்கு புகுந்து 3 ஆடுகளை கடித்துக் கொன்ற சம்பவம் அந்த பகுதி மக்கள் இடையே பீதியை ஏற்படுத்தி உள்ளது. எனவே மர்ம விலங்குகள் குடியிருப்பு பகுதிக்குள் புகுவதை தடுக்க சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# குரோமியம் கழிவு தாக்கத்தால் பொது மக்களுக்கு நோய் பாதிப்பு அன்புமணி

சென்னை, ஆக. 5

பா.ம.க. தலைவர் அன்புமணி 'உரிமை மீட்க, தலைமுறை காக்க' எனும் தலைப்பில் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில், ராணிபேட்டை மாவட்டத்தில் நேற்று நடைபயணம் மேற்கொண்டார். அப்போது, மூடப்பட்டு கிடக்கும் குரோமியம் தயாரிக்கும் ஆலையை பார்வையிட்டு, ஆலையில் உள்ள கழிவுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அப்போது, அவர் பேசியதாவது,

ராணிப்பேட்டை பகுதியில் செயல்பட்டு வந்த குரோமியம் உற்பத்தி செய்யும் கம்பெனி, கடந்த 1989ம் ஆண்டு மூடப்பட்டது. ஆனால், அதற்குள் லட்சக்கணக்கான டன் கழிவுகள் அப்படியே உள்ளன. அவற்றை அகற்ற தமிழக அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பசுமை தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியும் கூட அதனை செயல்படுத்த தமிழக அரசு மறுத்து வருகிறது. அந்த பகுதி அமைச்சர் காந்தியும், இந்த கழிவுகளை அகற்ற இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. குரோமிய கழிவுகள் நிலத்தடி நீரில் கலந்து, புற்று நோயையும் பல்வேறு உடல் சார்ந்த மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் பிரச்சினைகளை உருவாக்கி வருகிறது. தற்போது நாம் குடிக்கின்ற நீரில் அனுமதிக்கப்பட்ட குரோமியத்தின் அளவு ஒரு லிட்டருக்கு 0.05 சதவீதம். ஆனால் இந்த குரோமியம் தயாரிக்கும் நிறுவனம் அமைந்திருக்கக்கூடிய சுற்றுவட்டார பகுதியில், 700 ஏக்கர் பரப்பளவில் இருக்கக்கூடிய ஒரு லிட்டர் குடிநீரில் கலந்திருக்கும் குரோமியத்தின் அளவு, 277 மில்லிகிராம் அளவுக்கு உள்ளது.



இவ்வளவு நச்சு கழிவுகள் உள்ள இந்த குடிநீரை குடித்தால் எப்படி மக்கள் உயிர் வாழ முடியும்.

குரோமியம் கழிவுகள், காற்றின் மூலமாகவும், தண்ணீரின் மூலமாகவும் நாள்தோறும் கலந்து மக்களின் உயிரை பறிக்கக் கூடிய நிலையில் உள்ளது. ஆண்மை குறைவு, கல்லீரல், மண்ணீரல், நுரையீரல் பிரச்சினை போன்ற பலவிதமான பிரச்சினைகள் இந்த பகுதி மக்களுக்கு ஏற்படுகிறது. தி.மு.க. ஆட்சி செய்வதற்கான தகுதியை இழந்து விட்டது. தன் மக்களை கொலை செய்து கொண்டிருக்க கூடிய இந்த அரசை வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்த குரோமியம் கழிவுகளை இங்கிருந்து அகற்ற ரூ.700 கோடி வரை செலவாகும் என்று சொல்கிறார்கள். இன்னும் ஒரு வார காலத்திற்குள் பசுமை தீர்ப்பாயத்தின் தீர்ப்பை செயல்படுத்த வேண்டும். மேலும், பாலாற்றை காப்பாற்றவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.என தெரிவித்தார் .

# சென்னையில் கூடுதலாக 7 இடங்களில் 'முதல்வர் படைப்பகம்': அமைச்சர் சேகர்பாபு அடிக்கல் நாட்டினார்

சென்னை, ஆக. 5

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில், திரு. வி.க.நகர் தொகுதியில் உள்ள ஓட்டேரி, சுப்புராயன் தெரு, பட்டாளம், பக்தவச்சலம் பூங்கா, புளியந்தோப்பு, வெங்கடேசபுரம் புதிய காலனி, மங்களபுரம் ஆகிய 7 இடங்களில் முதல்வர் படைப்பகம் அமைக்கப்பட உள்ளது. இதற்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று அடிக்கல் நாட்டி இப்பணிகளை தொடங்கி வைத்தார்.




பின்னர், அமைச்சர் சேகர்பாபு நிருபர்களிடம் கூறியதாவது:

முதல்வர் படைப்பக கட்டுமானப் பணிகள் நவம்பர் மாத இறுதிக்குள் முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். இந்த ஆண்டுக்குள் மேலும் 15 படிப்பகங்களை உருவாக்கும் திட்டத்தையும் சென்னை மாநகராட்சி அறிவித்து உள்ளது. தற்போது வரை சென்னையில் 45 முதல்வர் படைப்பகங்களை உருவாக்கிய பெருமை முதல் அமைச்சரையே சாரும். மேலும், வட சென்னையின் நுழைவு வாயிலாக கருதப்படும் பாரிமுனை பிரகாசம் சாலியில் மிகப்பெரிய நூலகம் உருவாக்கப்பட இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# கொலை செய்யப்பட்ட குறும்பட ஒளிப்பதிவாளருக்கு தேசிய விருது: யார் இந்த சரவணமருது..?



மதுரை ஆக. 5

மதுரை ஜெய்ஹிந்த்புரத்தைச் சேர்ந்தவர், சரவணமருது சவுந்தரபாண்டி (வயது 28).. இவர் சினிமா ஒளிப்பதிவாளராக முயற்சி செய்து வந்தார். குறும்படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தார்.

'சனிப்பிணம்' என்ற சிறுகதையை வைத்து 'லிட்டில் விங்ஸ்' என்ற குறும்படம் தயாரிக்கப்பட்டது. அதன் ஒளிப்பதிவாளராக சரவணமருது மற்றும் மீனாட்சி சோமன் ஆகியோர் பணியாற்றினர்.

இந்நிலையில் கடந்த 2023ம் ஆண்டு திடீரென சரவண மருது மாயமானார்.

இதுதொடர்பாக போலீசில் புகார் அளிக்கப்பட்டது. விசாரணையில் சரவண மருது கொல்லப்பட்டதும், அவரது உடல் கீரனூர் பகுதியில் கண்மாய் பகுதியில் புதைக்கப்பட்டதும் தெரியவந்தது. பெண் விவகாரத்தில் அவர் கொல்லப்பட்டதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிலர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் 71வது தேசிய திரைப்பட விருதுகள் 2 நாட்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டன. அதில் சிறந்த குறும்பட ஒளிப்பதிவுக்கு லிட்டில் விங்ஸ் படம் தேர்வானது. அந்த விருதை பெற சரவணமருது உயிரோடு இல்லை.

2 ஆண்டுகளுக்கு முன்பு கொலை செய்யப்பட்டவருக்கு தற்போது தேசிய விருது அறிவிக்கப்பட்டு இருப்பது மதுரையில் பேசுபொருளாக மாறி இருக்கிறது.

# வார விடுமுறையை முன்னிட்டு ஊட்டியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

நீலகிரி, ஆக. 5

நீலகிரி மாவட்டத்தில் நிலவும் இதமான கால நிலை மற்றும் இயற்கை வளம் மிகுந்த வனப்பகுதிகள் மற்றும் சுற்றுலா தலங்களை கண்டு ரசிக்க தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மட்டுமின்றி, வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். குறிப்பாக வார விடுமுறை நாட்களில் நீலகிரியில் உள்ள சுற்றுலா தளங்களில் மக்கள் கூட்டம் அதிகரித்து காணப்படும்.

கடந்த மாதம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தொடர் மழை பெய்து வந்ததால் சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்தது. இந்நிலையில், தற்போது மழை குறைந்து இதமான கால நிலை நிலவுவதால் மீண்டும் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை தருகின்றனர். இன்று வார விடுமுறையை முன்னிட்டு அதிகாலை முதலே ஊட்டியில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.



அங்குள்ள அரசு தாவரவியல் பூங்காவில் பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர். மேலும் பெரணி இல்லம், கண்ணாடி மாளிகை, இத்தாலியன் பூங்கா, கிக் யூ புல்வெளி உள்ளிட்ட இடங்களுக்கு சென்ற சுற்றுலா பயணிகள், தங்கள் குடும்பத்தோடு புகைப்படங்கள் எடுத்தும், அங்கு நிலவிய இதமான வானிலையை அனுபவித்தும் மகிழ்ந்தனர்.

# திமுகவுடன் கள்ள உறவில் இருப்பதை நிரூபித்துவிட்டார் ஓபிஎஸ்.. முன்னாள் அமைச்சர் பொன்னையன்

சென்னை, ஆக. 5

சென்னை கிண்டியில் உள்ள தீரன் சின்னமலை சிலைக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் பொன்னையன் பத்திரிகையாளர்களை சந்தித்தார்.

அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:

கேள்வி: முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியே வந்து விட்டாரே?

பதில்: ஓ.பன்னீர்செல்வம் ஏற்கனவே அழிந்துவிட்டார். தி.மு.க.வோடு கள்ள உறவு வைத்திருந்தவர். சட்டசபையிலேயே ஒரு முறை பேசும்போது, கருணாநிதி போட்டோவை, தனது அப்பாவின் புகைப்படத்துடன் வைத்து சாமி கும்பிட்டு விட்டுதான் மற்ற வேலையை செய்வோம் என்று அவர் சொன்ன அன்றே, அவர் கள்ள உறவில் இருந்தது தெரிந்து விட்டது. அந்த கள்ள உறவை இன்று உறுதிபடுத்தி இருக்கிறார். இது எங்களுக்கு லாபம், அவருக்கு அழிவு. ஓ.பன்னீர்செல்வம் தன் தலையில் மண்ணை வாரி போட்டுக்கொண்டார், கள்ள உறவுக்காரர் என்ற பட்டத்தையும் கட்டிக்கொண்டார்.



கேள்வி: எடப்பாடி பழனிசாமி சொல்லி தான் பிரதமர் மோடி தன்னை சந்திக்கவில்லை என்று ஓ. பன்னீர்செல்வம் கூறுகிறாரே?

பதில்: அது உண்மை இல்லை. செல்லாக்காசாக கடலில் மூழ்கிவிட்ட ஒரு துரோகி என்ற பட்டத்தை பெற்றவர் அவரைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்?

கேள்வி: கூட்டணியில் வேறு கட்சிகள் இணைய உள்ளனவா?

பதில்: பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தான் கூட்டணி குறித்து பேசுவார். அதற்கான அதிகாரத்தை எங்கள் 2 கோடி தொண்டர்களும் அவருக்கு கொடுத்திருக்கிறோம். தன்னிகரற்ற தலைவர், தனியாட்சி அமைக்கின்ற மாமனிதராக அவரை மக்கள் அறிவார்கள்.

கேள்வி: பா.ஜனதா ஆபத்தான கட்சி என்று பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியுள்ளாரே?

பதில்: பண்ருட்டி ராமச்சந்திரன் பல கட்சிகள் மாறியவர். பல கொள்கைகளுக்கு ஆதரவானவர் அதுகுறித்து பேசி பயனில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# திருத்தணி முருகன் கோவிலில் காவடிகளுடன் குவிந்த பக்தர்கள்

திருவள்ளூர் ஆக. 5

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஐந்தாம் படைவீடாக திகழ்வது திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில். தமிழகம் மட்டுமின்றி, வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் இந்த கோயிலுக்கு வந்து செல்வது வழக்கம். இக்கோவிலுக்கு விடுமுறை நாட்களில் சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படும்.

இந்நிலையில் இன்று ஆடிப்பெருக்கு மற்றும் ஞாயிறு விடுமுறை தினம் என்பதால் ஆந்திர, கர்நாடக மாநிலம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து திரளான பக்தர்கள் காவடிகள் எடுத்து வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர். இதனால் கோவில் வளாகம் முழுவதும் பக்தர்களால் நிரம்பி வழிந்தது.



காலை முதலே மலைக் கோவிலுக்கு வெளியூர்களிருந்து வந்த சுற்றுலா பஸ்கள், கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் அதிக அளவில் வந்ததால் மலைக்கோவிலில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பொது தரிசனவழியில் பக்தர்கள் நீண்ட வரிசையில் சுமார் 3 மணி நேரம் காத்திருந்து மூலவரை தரிசனம் செய்தனர்.

இன்று அதிகாலை 5 மணிக்கு மூலவருக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் செய்யப்பட்டு, தங்க வேல், தங்க கிரீடம் மற்றும் வைர ஆபரணங்கள் அணிவித்து சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

# சேலம் அருகே தீ விபத்து 15க்கும் மேற்பட்ட கால்நடைகள் பலி

சேலம், ஆக. 5

சேலம் அருகே கருப்பூர் மூங்கப்பாடியை பகுதியை சேர்ந்தவர் யோகேஷ் (வயது 45). விவசாயியான இவர் வீட்டின் அருகே கோழிப் பண்ணை வைத்துள்ளார். இங்கு 20 நாட்டுக்கோழிகள், 2 ஆடுகள் மற்றும் நாய் ஒன்று வளர்த்து வந்தார்.

நேற்று அதிகாலை 4 மணி அளவில் கோழிப் பண்ணை அமைக்கப்பட்டுள்ள குடிசையில் இருந்து கரும்புகை வந்தது. பின்னர் சிறிது நேரத்தில் தீப்பிடித்து எரிந்தது. இதனிடையே அருகில் இருந்த வீட்டில் தூங்கி கொண்டிருந்த யோகேஷ், கோழிப்பண்ணையில் தீப் பற்றி எரிந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து ஓமலூர்தீயணைப்புநிலையத்துக்கு உடனே தகவல் கொடுக்கப்பட்டது.







அதன்பேரில் நிலைய அலுவலர் தர்மலிங்கம் தலைமையில்தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று சுமார் ஒரு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். மேலும் தீயில் கருகியதில் 15 நாட்டுக்கோழிகள், 2 ஆடுகள், ஒரு நாய் ஆகியவை செத்தன.

சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் கருப்பூர் போலீசார் அங்கு சென்று விசாரித்தனர். அதைத்தொடர்ந்து யோகேஷ் கொடுத்த புகாரின் பேரில், கோழிப் பண்ணைக்கு யாராவது மர்ம நபர்கள் தீவைத்தார்களா? அல்லது எப்படி தீ விபத்து நடந்தது? என்பது குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆடிப்பெருக்கு.. மேட்டுப்பாளையத்தில் கன்னிமார் பூஜை செய்து முன்னோர்களை வழிபட்ட மக்கள்

கோயம்புத்தூர் ஆக. 5

ஆடி பெருக்கை முன்னிட்டு மேட்டுப்பாளையம் வனபத்ர காளியம்மன் கோவில் பவானி ஆற்றின் கரையோர பகுதியில் காலை முதலே பொதுமக்கள் குவிந்தனர். பொதுமக்கள் பவானி ஆற்றில் நீராடிய பின்னர் கன்னிமார் பூஜை செய்து முன்னோர்களை வழிபட்டனர். இதற்காக படித்துறையில் 7 கற்களை எடுத்து வைத்து அவற்றுக்கு விபூதி, குங்குமம், சந்தனமிட்டு, படையலிட்டு குடும்பத்துடன் தங்களது முன்னோர்களை வழிபட்டனர்.

ஆடிப்பெருக்கை முன்னிட்டு பவானி ஆற்றின் கரையோர பகுதியில் காவல்துறையினர் மற்றும் தீயணைப்பு துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ஆடி குண்டம் திருவிழாவில் 13 ஆம் நாள் மற்றும் ஆடிப்பெருக்கை முன்னிட்டு வனபத்ரகாளியம்மன் கோவில் நடை காலை 6.00 மணிக்கு திறக்கப்பட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார பூஜை தீபாராதனை நடைபெற்றது. பவானி ஆற்றின் கரையோரப் பகுதியில் உள்ள முத்தமிழ் விநாயகர் சன்னதி பீமன் பகாசுரன் சந்நிதி மற்றும் கோவில் வளாகம் முழுவதும் பக்தர்கள் திரண்டு காணப்பட்டனர். பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். கொடி மரத்தின் முன்பு பெண்கள் எலுமிச்சை தீபம் ஏற்றி அம்மனை மனதில் நினைத்து பயபக்தியுடன் வழிபட்டனர்.



ஆடிப்பெருக்கை முன்னிட்டு பக்தர்களுக்கு தேவையான வசதிகளை கோவில் நிர்வாகம் செய்துள்ளது. தமிழக அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன.

ஆடி குண்டம் திருவிழாவின் 14வது நாள் நிகழ்வாக, நாளை காலை 8 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார பூஜையும், காலை 10 மணிக்கு திருக்கோவில் சார்பாக 108 திருவிளக்கு பூஜையும், பகல் 12 மணி மற்றும் மாலை 5 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார பூஜையும் நடைபெறும்.


விழாவின் 15வது நாளில் (5.8.2025) காலை 8 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார பூஜை தீபாராதனை, மறுபூஜையுடன் ஆடிகுண்டம் திருவிழா நிறைவுபெறும்.

# இந்த முறை என்னோட பிரசாரம் வேற மாதிரி இருக்கும்; பிரேமலதா விஜயகாந்த்

சென்னை: ஆக. 5

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் சென்னையில் இன்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: "உள்ளம் தேடி இல்லம் நாடி என்ற பிரசாரமும், விஜயகாந்தின் ரத யாத்திரையும் இன்று முதல் தொடங்குகிறது.

கும்மிடிப்பூண்டியில் தொடங்கி கன்னியாகுமரி வரை மூன்று கட்டப் பயணமாக எங்களுடைய பயணம் இருக்கும். இந்த முறை யாருடனும் இன்னும் கூட்டணி உறுதியாகவில்லை. 'என்ன பேசுவார்கள், யாரைத் திட்டுவார்கள், யாரைக் குறை சொல்வார்கள்' என்று நீங்கள் நினைக்கலாம். திட்டுவதும் குறை சொல்வதும் மட்டுமே அரசியல் இல்லை. என்னுடைய பிரசாரம் இந்த முறை வேறு மாதிரி வித்தியாசமாக இருக்கப் போகிறது. நாங்கள் எங்கு கூட்டணி அமைக்கிறோமோ, அந்தக் கூட்டணி மகத்தான வெற்றி பெறும். எங்கள் பிரசாரம் அதை நோக்கியே இருக்கும்" என்றார்.



வரும் சட்டமன்றத் தேர்தலில் யாருடன் கூட்டணி என்பதை வரும் ஜனவரி மாதம் நடைபெறும் கட்சி மாநாட்டில் தான் அறிவிப்போம் என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார். இத்தகைய சூழலில், அண்மையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை பிரேமலதா சந்தித்தது தமிழக அரசியல் வட்டாரத்தில் கவனம் பெற்றது.

நலம் விசாரிக்க மட்டுமே மு.க. ஸ்டாலினை சந்தித்ததாக பிரேமலதா கூறினாலும், இந்தச் சந்திப்பு அரசியல் ரீதியாக பல்வேறு யூகங்களுக்கு வித்திட்டுள்ளது. இத்தகைய சூழலில்தான் தனது பிரசாரத்தில் யாரையும் விமர்சிக்கப் போவதில்லை என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

# முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம்: தூத்துக்குடியில் பள்ளி மாணவிகள் உறுதிமொழி ஏற்பு



தூத்துக்குடி ஆக .5

தூத்துக்குடி சுப்பையா வித்யாலயம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (1.8.2025) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமையில் பள்ளி மாணவிகள் அனைவரும் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன் பேசியதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் பெரியவர்கள் நலனில் அக்கறைக் கொண்டு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். கிட்டத்தட்ட 15 லட்சம் நபர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,200 முதியோர் உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. முதியோர்கள் பொருளீட்டுவதற்கான வசதிக்காகவும், அவர்களின் வாழ்வாதார தேவைக்காகவும் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. 648 அரசு மற்றும் தனியார் அமைப்புகள் மூலம் ஆதரவற்றோர்களுக்கான முதியோர் இல்லங்கள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் முதியோர்களின் உரிமைகளை பராமரிப்பதற்காகவே பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டங்கள் கொண்டுவரப்பட்டது. இதன்மூலம் மாவட்ட கலெக்டர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர்கள் வாயிலாக புகார் அளிக்கும்பட்சத்தில் அவர்களின் குறைகளை கேட்டறிந்து சட்டரீதியாகநடவடிக்கை மேற்கொள்ளலாம். இச்சட்டத்தின் வாயிலாக சுமார் 2,000 பேர் பயனடைந்துள்ளனர். எனவே இச்சட்டம் முதியோர்களுக்கு பயனுள்ளதாக அமையும். நாம் அனைவரும் பெற்றோர்களைக் கௌரவமாகவும், நல்ல ஒரு மனிதர்களாகவும் நடத்துகின்ற பொழுது வாழ்க்கையில் எல்லாம் நன்றாக நடக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன், முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கையெழுத்து இயக்கத்தை கையெழுத்திட்டு தொடங்கி வைத்து, செல்பி பாயிண்டில் மாணவிகளுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். மேலும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பாக அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை பார்வையிட்டு, முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம் குறித்து நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் உரிமைத் துறை இயக்குநர் சங்கீதா, மாநகராட்சி கமிஷனர் பானோத் மிருகேந்தர் லால், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இணைஇயக்குநர் (சிறப்பு திட்டம்) உமாதேவி, தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் பிரபு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கணேஷ்மூர்த்தி, மாவட்ட சமூக நல அலுவலர் பிரேமலதா, தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவரும், கவுன்சிலருமான கலைச்செல்வி, சுப்பையா வித்யாலயம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் விபாஸ்ரீ மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆடிப்பெருக்கு: பண்ணாரி மாரியம்மன் கோவிலில் பக்தர்கள் வருகை அதிகரிப்பு

ஈரோடு ஆக. 5

சத்தியமங்கலத்தை அடுத்து பிரசித்தி பெற்ற பண்ணாரி மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை, பண்டிகை நாட்கள், அரசு விடுமுறை நாட்கள், அமாவாசை, பௌர்ணமி மற்றும் முகூர்த்த நாட்களில் பக்தர்களின் கூட்டம் அதிக அளவில் இருக்கும். தமிழ்நாடு மட்டுமல்லாமல் கர்நாடகாவில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து அம்மனை வணங்கி செல்வார்கள்.

இந் நிலையில், இன்று ஆடி 18, ஆடிப்பெருக்கை முன்னிட்டு வழக்கத்தை விட பக்தர்கள் கூட்டம் அதிகரித்துள்ளது. அதிகாலை 5 மணி முதலே பக்தர்கள் குவியத் தொடங்கினர். காலை 6 மணிக்கு நடை திறக்கப்பட்டதும் பக்தர்கள் வரிசையாக சென்று அம்மனை தரிசனம் செய்தனர். பின்னர் கோவிலுக்கு





வெளியே உள்ள குண்டத்தில் இருந்த சாம்பலை எடுத்து திருநீறாக நெற்றியில் வைத்து கொண்டனர். அத்துடன், ஏராளமான பக்தர்கள் நேர்த்திக்கடனுக்காக கொண்டு வந்திருந்த மிளகு மற்றும் உப்பு கலவையை கோவிலின் முன்பாக தூவி கற்பூரம் ஏற்றி வணங்கினர். ஏராளமான பெண்கள் தீபம் ஏற்றியும் அம்மனை வணங்கினார்கள்.

பக்தர்களின் வசதிக்காக சத்தியமங்கலத்தில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சத்தியமங்கலம் போலீஸ் டிஎஸ்பி முத்தரசு தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# கோவில்பட்டியில் 2 டன் ரேஷன் அரிசி கடத்தியவர் கள்ளச்சந்தை தடுப்பு சட்டத்தில் கைது

தூத்துக்குடி ஆக. 5

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, மாதன் கோவில் ரோடு, கிருஷ்ணன் கோவில் ஜங்ஷனில் ஒரு மினி லாரியில் 40 மூடைகளில் சுமார் 2,000 கிலோ (2 டன்) ரேசன் அரிசியை கடத்திய வழக்கில் கோவில்பட்டி, ஊரணி 1வது தெருவைச் சேர்ந்த லுக்காஅசாரியா மகன் முத்துமாரியப்பன்(எ) சின்ன மாரி (வயது 33) 16.7.2025 அன்று கைது செய்யப்பட்டார்.

அவரை கள்ளச்சந்தை தடுப்புக் காவலில் சிறையில் அடைக்க மதுரை தென் மண்டல குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை எஸ்.பி. சீனிவாசபெருமாள் அறிவுரையின் பேரில், தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் உத்தரவின் பேரில், 1.8.2025 அன்று பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

தொடர்ந்து பொது விநியோகத்திட்ட அரிசியை கள்ளச்சந்தையில் பதுக்கும் கடத்தலில் ஈடுபடும் குற்றவாளிகள் கள்ளச்சந்தை தடுப்புக் காவலில் சிறையில் அடைக்கப்படுவார்கள் என தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

# திருப்பத்தூர்: சிறுமியை கர்ப்பமாக்கிய சிறுவன் போக்சோவில் கைது

அரியலூர் ஆக. 5

அரியலூர் மாவட்டம் குடந்தை மறை மாவட்டம் ஜெயங்கொண்டம் மறை வட்டம் நகரில் வீற்றிருக்கும் தூய பாத்திமா அன்னை ஆலய 62 ஆம் ஆண்டு பெருவிழா திருப்பலியோடு துவங்கி நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வான தேர்பவனி விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஜெயங்கொண்டம் மறை வட்ட முதன்மை குரு ஜோசப் கென்னடி முன்னிலை வகித்தார். திருவிழா திருப்பலி நிக ழ்ச்சிக்கு கும்பகோணம் மறைமாவட்ட முதன்மை குரு கோஸ்மான் ஆரோக்கியராஜ் மற்றும் ஜெயங்கொண்டம் மறை வட்ட குருக்கள் ஆகியோர் தலைமை வகித்தனர் .

தனைத் தொடர்ந்து ஆலயத்தில் இருந்து ஆடம்பர தேர் பவனி தொடங்கியது. பாடல் குழுவினர்களின் பாடல்களுடன் பேருந்து நிலையம் சாலை, அண்ணா சிலை, கடைவீதி, 4 ரோடு வழியாக வலம் வந்த தேர், மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது. இதனைத் தொடர்ந்து திவ்ய நற்கருணை நடைபெற்றது. .

தேர் பவனி மற்றும் சிறப்பு திருப்பலி நிகழ்ச்சியில் சூரியமணல், சூசையப்பர்பட்டினம், விழப்பள்ளம், வடவீக்கம், மைக்கேல்பட்டி, உட்பட பல்வேறு கிராமங்களில் இருந்து 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# ஓ.பன்னீர்செல்வம் தனது முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும் டிடிவி தினகரன் பேட்டி



சென்னை, ஆக. 5

கடந்தசிலதினங்களுக்கு முன்பு தமிழகம் வந்த பிரதமர் மோடியை சந்திக்க வாய்ப்பு கேட்டு ஓ.பன்னீர்செல்வம் கடிதம் எழுதி இருந்தார். ஆனால் அவருக்கு பிரதமரை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இதனால் அதிருப்தியடைந்த ஓ.பன்னீர்செல்வம், பாஜக கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இது தொடர்பாக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரனுக்கும், ஓ.பன்னீர்செல்வத்துக்கும் இடையே கருத்து மோதல் நிலவி வருகிறது.

இந்த நிலையில், பாஜக கூட்டணியில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் விலகியது குறித்து அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது;

"தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் விலகியது அதிர்ச்சியளிக்கிறது. ஓ.பன்னீர்செல்வத்தின் முடிவு தனிப்பட்ட முறையில் எனக்கு வருத்தமளிக்கிறது. கடந்த 7 ஆண்டுகளாக பாஜக கூட்டணியிலும், அக்கட்சியின் தலைவர்களுடனும் நல்ல உறவில் இருந்தார். அந்த முடிவுக்கு அவர் தள்ளப்பட்டிருக்கக் கூடாது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகிய தனது முடிவை ஓ.பன்னீர்செல்வம் மாற்றிக்கொள்ள வேண்டும். அவரை சமாதானப்படுத்தி மீண்டும் கூட்டணிக்கு அழைத்து வர பாஜகவினர் முயற்சிக்க வேண்டும். மத்திய மந்திரி அமித் ஷா தலையிட்டு இந்த பிரச்னைக்கு தீர்வு காண்பார்." இவ்வாறு அவர் கூறினார்.

# பா.ஜ.க. வழக்கறிஞர் பிரிவு செயலாளரை கைது செய்தது செல்லாது: சென்னை ஐகோர்ட்டு அதிரடி

சென்னை ஆக. 5

தமிழக பா.ஜ.க. வழக்கறிஞர் பிரிவு செயலாளர் அலெக்ஸிஸ் சுதாகரை கடந்த ஆண்டு ஜூன் மாதம் மாமல்லபுரம் போலீசார் கைது செய்தனர். இதேபோல் பண மோசடி, ஆள் கடத்தல் தொடர்பாக, கோவை குனியமுத்தூர், துடியலூர் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளிலும், அலெக்ஸிஸ் சுதாகர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார். குண்டர் தடுப்பு சட்ட உத்தரவை, அறிவுரை கழகம் ரத்து செய்தது. அதைத் தொடர்ந்து, மூன்று வழக்குகளிலும், அலெக்ஸிஸ் சுதாகர் ஜாமினில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், மூன்று வழக்குகளிலும் கைது செய்து சிறையில் அடைத்த உத்தரவுகளை ரத்து செய்ய கோரி, சென்னை ஐகோர்ட்டில், அலெக்ஸிஸ் சுதாகர் தனித்தனியாக மனு தாக்கல் செய்தார். நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு இந்த மனுக்கள் மீதான விசாரணை நடந்தது. மனுக்களை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், "மனுதாரரிடம் மூன்று வழக்குகளில் கைதுக்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. அதேபோல, குடும்பத்தினருக்கும் தகவல் தெரிவிக்கவில்லை. இது, சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புக்கு விரோதமானது. எனவே, அலெக்சிஸ் சுதாகரை கைது செய்து, சிறையில் அடைத்த உத்தரவுகள் செல்லாது," என உத்தரவிட்டார்.

# திருப்பத்தூரில் 11ம் வகுப்பு மாணவன் மர்மமான முறையில் மரணம்

சென்னை ஆக. 5

திருப்பத்தூர் மாவட்டத்தில் அரசு உதவிபெறும் பள்ளியின் விடுதியில் தங்கி பயின்று வந்த முகிலன் என்ற 11ம் வகுப்பு மாணவன், அப்பள்ளியில் உள்ள கிணற்றில் உடலில் தீக்காயங்களுடன் மர்மமான முறையில் இறந்து கிடந்திருப்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. உயிரிழந்த மாணவனின் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஒன்றாம் தேதி முதல் வகுப்பிற்கு வராத மாணவனை அவரது பெற்றோரும், போலீசாரும் தேடி வந்துள்ள நிலையில், பள்ளியில் மூடியிருந்த கிணற்றில் பள்ளி சீருடையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. முகிலன் கொலை செய்யப்பட்டு கிணற்றில் வீசப்பட்டாரா? மாணவன் தொலைந்து இரண்டு நாட்களாகியும் பள்ளி நிர்வாகம் பள்ளியின் அனைத்து இடங்களிலும் அவரைத் தேடாதது ஏன்? இதில் அரசியல் தலையீடுகள் ஏதாவது இருக்கின்றனவா? போன்ற அனைத்து கோணங்களிலும் இந்த வழக்கின் விசாரணை நடத்தப்பட வேண்டும். எவ்வித சமரசமுமின்றி இதில் தொடர்புடைய குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். மேலும், கடந்த நான்காண்டுகளாக மாணவர்களின் மரணங்கள் நாளுக்கு நாள் பெருகி வரும் நிலையில், படிக்கும் பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான மனநிலையையும், பள்ளியில் அவர்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலையையும் உருவாக்கிடத் தேவையான நடவடிக்கைகளை தி.மு.க. அரசு முன்னெடுக்க வேண்டுமென முதல்வர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# முற்றும் மோதல்: குறுஞ்செய்தியை காட்டிய ஓபிஎஸ் ஆதாரம் கேட்கும் நயினார் நாகேந்திரன்



சென்னை, ஆக. 5

சமீபத்தில் தமிழகம் வந்த பிரதமர் மோடியை சந்திக்க வாய்ப்பு கேட்டு ஓ.பன்னீர்செல்வம் கடிதம் எழுதி இருந்தார். ஆனால் அவருக்கு பிரதமரை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இதையடுத்து தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்ட ஓ.பன்னீர்செல்வம், பாஜக கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

இதுகுறித்து பேசிய தமிழக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், என்னிடம் சொல்லி இருந்தால் பிரதமரை சந்திக்கும் வாய்ப்பை ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஏற்படுத்திக் கொடுத்திருப்பேன் என தெரிவித்து இருந்தார். இதனை ஏற்க மறுத்த ஓ.பன்னீர்செல்வம், நயினார் நாகேந்திரனை 6 முறை தொலைபேசியில் அழைத்தும், எனது அழைப்பை அவர் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார். ஆனால், தன்னையோ, தனது உதவியாளரையோ ஓ.பன்னீர்செல்வம் அழைக்கவில்லை என நயினார் நாகேந்திரன் பதிலளித்தார்.

இதனையடுத்து பிரதமர் மோடியை சந்திப்பது தொடர்பாக நயினார் நாகேந்திரனுக்கு அனுப்பிய குறுஞ்செய்தியை ஓ.பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் காண்பித்தார். அதில் கடந்த ஜூலை மாதம் 24ந்தேதி மற்றும் ஏப்.12 ஆகிய தேதிகளில் நயினார் நாகேந்திரனுக்கு அனுப்பிய குறுஞ்செய்தியை காண்பித்தார்.

இதனை தொடர்ந்து ஓ.பன்னீர்செல்வம்அனுப்பிய குறுஞ்செய்தியை செய்தியாளர்களிடம் காண்பித்தது பற்றிய கேள்விக்கு பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் "செல்போனில் காட்ட வேண்டாம்; ஆதாரமாக கொடுங்கள்" என பதில் அளித்தார். மேலும் நயினார் நாகேந்திரன் பேச தயாரானபோது பிறகு பேசலாம் எனக் கூறி அண்ணாமலை அழைத்துச் சென்றார்.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் நயினார் நாகேந்திரன் இடையே கருத்து மோதல் முற்றி வருகிறது.

# த.வெ.க.வில் 20 ஆயிரம் வாக்குச்சாவடி முகவர்களுக்கு புதிய உறுப்பினர் சேர்க்கை பயிற்சி



சென்னை, ஆக. 5

தமிழக வெற்றிக்கழகத்தில் உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த 'மை டி.வி.கே.' என்ற செயலியை அக்கட்சியின் தலைவர் விஜய் கடந்த 30ந்தேதி அறிமுகப்படுத்தினார். இந்த செயலி மூலமாக, 'வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு' என்றதலைப்பில்ஊருக்கு, ஊர், வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு உறுப்பினர் சேர்க்கைசெய்வதுதொடர்பாக மாவட்ட செயலாளர்கள், தகவல்தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக விஜய் உத்தரவுப்படி, செயலியை பயன்படுத்துவது தொடர்பாகவும், அதன்மூலமாக உறுப்பினர்களை தமிழக வெற்றிக் கழகத்தில் சேர்ப்பது தொடர்பாகவும் மாவட்ட செயலாளர்களும், பயிற்சி பெற்ற தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளும் அவர்களுக்குரிய மாவட்டங்களை உள்ளடக்கிய வாக்குச்சாவடி முகவர்களுக்கும், உறுப்பினர் சேர்க்கை அணி நிர்வாகிகளுக்கும் பயிற்சி வழங்குவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி முதற்கட்டமாக சென்னை மாவட்டத்தில் உள்ள மயிலாப்பூர், வேளச்சேரி, காஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள காஞ்சீபுரம், உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர் உள்பட தமிழகம் முழுவதும் 54 சட்டமன்ற தொகுதிகளில் இருக்கும் 15 ஆயிரத்து 652 வாக்குச்சாவடிகளை சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் உறுப்பினர் சேர்க்கை அணி நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

சென்னை மயிலாப்பூர், வேளச்சேரி தொகுதியை சேர்ந்த த.வெ.க. வாக்குச்சாவடி முகவர்கள், உறுப்பினர் சேர்க்கை நிர்வாகிகளுக்கு தரமணியில் உள்ள தனியார் திருமணமண்டபத்தில்பயிற்சி முகாம் நடைபெற்றது.

# 2 புதிய வழித்தடங்களில் மகளிர் விடியல் பயணத் திட்ட புதிய நகரப் பேருந்துகளையும் 4 வழித்தடங்களில் புதிய குளிர்சாதன புறநகர் பேருந்துகள்: துணைமுதல்வர் துவக்கினார்

திருவண்ணாமலை, ஜூலை 15

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திருவண்ணாமலை தென்மாத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மகளிர் மற்றும் மருத்துவமனை செல்லும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தென்மாத்தூரிலிருந்து அருணை கல்லூரி, சரோன் புறவழிச்சாலை, திருவள்ளுவர் சிலை, காந்தி நகர், பெரியார் சிலை. மத்திய பேருந்து நிலையம், மின்வாரிய அலுவலகம், வேங்கிகால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மருத்துவ கல்லூரி வழியாக தீபம் நகர் வரை தினசரி 28 நடைகள் இயக்கப்படும் வகையில் 2 மகளிர் விடியல் பயண புதிய நகரப் பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை கிளாம்பாக்கம் இடையே இயக்கப்பட்டு வரும் 122 . 122 , 122 ஆகிய வழித்தடங்கள், திருவண்ணாமலை கோயம்புத்தூர் இடையே இயக்கப்பட்டு வரும் 434 ஆகிய வழித்தடங்களில் 4 புதிய குளிர்சாதன புறநகரப் பேருந்துகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமான மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் கீழ் 128 நகர பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு, நாள் ஒன்றிற்கு சராசரியாக 77 ஆயிரம் மகளிர் பயணம் மேற்கொண்டு வருகின்றார்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில் இதுநாள் வரை விடியல் பயணத்திட்டத்தின் மூலம் 11 கோடியே 29 லட்சம் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொண்டுள்ளார்கள். மகளிர் விடியல் பயணம் திட்டம் தொடங்கப்பட்டபோது திருவண்ணாமலை மாவட்டத்தில் நகரப் பேருந்துகளில் பயணம்செய்யும் மகளிர் எண்ணிக்கை 61 சதவிகிதமாக இருந்தது, தற்போது 80 சதவிகிதமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்

# உடுமலையில் சட்டவிரோத காவல் விசாரணையில் பழங்குடியினத்தவர் உயிரிழப்பு: நெல்லை முபாரக் கண்டனம்



சென்னை ஆக.5

எஸ்டிபிஐ கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருப்பூர்மாவட்டம், உடுமலை அருகே சின்னாறு கிராமம் பழங்குடியின சமூகத்தை சேர்ந்த மாரிமுத்து என்பவர், விசாரணை என்ற பெயரில் வனத்துறையினரால் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டு, கொடூரமாகத் தாக்கப்பட்டு, வனச்சரக அலுவலகத்தில் உயிரிழந்த சம்பவம் நெஞ்சை உலுக்குகிறது. இந்த காவல் மரணத்தை எஸ்டிபிஐ கட்சி வன்மையாக கண்டிக்கிறது. விவசாயம் நிலம் தொடர்பாக வனத்துறையினருடனான பிரச்சினையில், பொய்யாக புனையப்பட்ட வழக்கில் 2025 ஜூலை 29ம் தேதியன்று உடுமலை நீதிமன்றத்தால் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்ட மாரிமுத்து, மறுநாள் ஜூலை 30ம் தேதியன்று நீதிமன்ற நடைமுறைகளுக்காக உடுமலைக்கு வந்து திரும்பும்போது, சின்னாறு வனச்சோதனைச் சாவடியில் அரசுப் பேருந்திலிருந்து வனத்துறையினரால் வலுக்கட்டாயமாக இறக்கப்பட்டு, உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படாமல், வனச்சரக அலுவலகத்தில் சித்தரவதைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்தார். அவரது உடலில் காணப்பட்ட பலத்த காயங்கள் இந்தக் கொடுமையை உறுதிப்படுத்துகின்றன. விவசாய நிலம் தொடர்பான முரண்பாடுகளால், மாரிமுத்து மீது பொய் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார். விடுதலைக்குப் பின்னரும் அவரை இலக்காக்கி, "சிறுத்தைப் பற்கள் கடத்தல், தற்கொலை" என வனத்துறை பரப்பும் பொய்க் கதைகள் நம்பகத்தன்மையற்றவை. இந்தப் படுகொலையை மறைக்க முயலும் வனத்துறையின் செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இந்தப் படுகொலைக்கு காரணமான வனச்சரகர் உள்ளிட்ட வனத்துறையினர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, உடனடியாகப் பணி நீக்கம் செய்ய வேண்டும். மாரிமுத்துவின் குடும்பத்திற்கு ரூ.50 லட்சம் இழப்பீடு மற்றும் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். இவ்வழக்கை நேர்மையான முறையில் விசாரிக்க, சிபிசிஐடி விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட வேண்டும். தமிழகத்தில் தொடரும் சட்டவிரோத காவல் மரணங்களைத் தடுக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

## திருப்பத்தூரில் நடைபாலம் உடைந்து விபத்து 10 பேர் காயம்



திருப்பத்தூர், ஆக. 5

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே உள்ள கொடையாஞ்சி கிராமத்தில் ஒவ்வொரு ஆண்டும் பாலாறு பகுதியில் ஆடிப்பெருக்குவிழாவெகு விமரிசையாக கொண்டாடப்படும். இந்த ஆடிப்பெருக்கு விழாவைக் காண சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் வருகை தருகின்றனர். அந்த வகையில் இன்று ஆடிப்பெருக்கு தினத்தையொட்டி கொடையாஞ்சி பகுதியில் ஏராளமான பொதுமக்கள் குவிந்தனர். இந்நிலையில், அதிக அளவிலானமக்கள்குவிந்ததால், பாலாறு பகுதியில் அமைக்கப்பட்ட நடைபாலம் உடைந்து விழுந்து விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் 10 பேர் காயமடைந்த நிலையில், அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பாலம் உடைந்த இடத்தில் அவசர அவசரமாக மண் நிரப்பி சரி செய்யும் பணி மேற்கொள்ளப் பட்டது.

## திடீரென கழன்று ஓடிய டயர் லாரி மீது நேருக்கு நேர் மோதிய ஆட்டோ



கன்னியாகுமரி மாவட்டம் கொல்லவிளை அருகே 2 பயணிகளை ஏற்றிக்கொண்டு ஆட்டோ ஒன்று சென்றுகொண்டிருந்தது. அப்போது ஆட்டோவின் டயர் திடீரென கழன்று ஓடியது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ எதிரே வந்த லாரி மீது நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஆட்டோ தூக்கி விசப்பட்டு அதில் இருந்த 3 பேரும் காயமடைந்தனர். இதில் ஒருவர் மட்டும் லாரியின் கீழ் தூக்கி வீசப்பட்டார்.

இதனிடையே ஆட்டோ மோதியதில் முன்னதாக சுதாரித்துக்கொண்ட லாரி டிரைவர் வாகனத்தை உடனடியாக நிறுத்தினார். இதனால லாரியின் கீழ் தூக்கி வீசப்பட்ட நபர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இதனையடுத்து அங்கிருந்த பொதுமக்கள் காயமடைந்த 3 பேரையும் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்த நிலையில் விபத்து தொடர்பாக அதிர்ச்சி சிசிடிவி காட்சிகள் இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இன்றைய ராசி பலன்கள் (5.8.2025)

**மேஷம்:** முயற்சிகளில் வெற்றி காணலாம். வேலை இடத்தில் சாதனை. குடும்பத்தில் சந்தோஷம் பெருகும்.

**ரிஷபம்:** பண விஷயங்களில் சிறிய கவனக்குறைவு ஏற்படலாம். புதிய ஒப்பந்தங்களில் சிந்தித்து செயல் படுங்கள்.

**மிதுனம்:** முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் சந்திப்பு நடக்கலாம். நண்பர்களிடம் உதவி கிடைக்கும். உடல் நலம் மேம்படும்.

**கடகம்:** வீட்டில் சில மன அழுத்தங்கள் இருந்தாலும், பிற்பகலில் நிலைமை சீராகும். பணத்தில் முன்னேற்றம்.

**சிம்மம்:** முக்கிய முடிவுகளை இன்று எடுக்க வேண்டாம். பேச்சு வாதங்களில் சிக்கல் ஏற்படலாம். சாந்தமாக இருங்கள்..

**கன்னி:** தொழிலில் நன்மை கிடைக்கும். குடும்பத்தில் அனந்த சாந்தி நிலவும். நீண்ட நாட்களாக இருந்த மனஉற்சாகம் திரும்பும்.

**துலாம்:** திடீர் பயணங்கள் ஏற்படலாம். நண்பர் ஒருவரிடம் இருந்து முக்கிய தகவல் கிடைக்கும். பணம் வரவு திருப்திகரமாக இருக்கும்.

**விருச்சிகம்:** உணர்வுகள் மேலோங்கி பேச வேண்டாம். வாக்குவாதங்களில் எச்சரிக்கையாக இருங்கள். புதிய முயற்சிகள் தேவை..


**தனுசு:** வெற்றி நிச்சயம்! தொழிலில் புதிய வாய்ப்பு தேடி வரும். வீண் செலவுகளைதவிர்க்கவேண்டும்.

**மகரம்:** கடன் அல்லது சட்ட சம்பந்தமான விஷயங்களில் சிக்கல் வந்தாலும் தீர்வு காணப்படும். குடும்ப ஒற்றுமை உண்டு.

**கும்பம்:** முடிவெடுக்கும் பொழுது பிறரது ஆலோசனையை கேளுங்கள். கணவன்மனைவி இடையே சிறிய மோதல் தோன்றலாம்.

**மீனம்:** சிறந்த நாள். தொழிலில் வளர்ச்சி. உத்தியோகத்தில் பதவி உயர்வு வரும் வாய்ப்பு உண்டு. மதிப்பும் மரியாதையும் கூடும்.

## 6 முதல் 10ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான உடற்கல்வி பாடப்புத்தகம்




மாணவர்கள் தேசிய, சர்வதேச அளவில் நடத்தப்பெறும் விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்க இந்த பாடத்திட்டம் வழி வகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டத்தில் 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவர்களுக்கு உடற்கல்வியை கற்பிப்பதற்கான பாடப்புத்தகத்தை பள்ளிக்கல்வித் துறை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் விளையாட்டுப் போட்டிகளை கற்றுத் தருவதற்கும், உடற்கல்விக்கும் பாடப்புத்தகங்கள் இல்லை என உடற்கல்வி ஆசிரியர்கள் தொடர்ந்து கூறி வந்தனர். மேலும் 2017ம் ஆண்டில் தமிழ்நாட்டில் பாடப்புத்தகங்கள் மாற்றி அமைக்கப்பட்டபோது, உடற்கல்விக்கான பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, கருத்துகள் பெறப்பட்டது. அதன் பின்னர் பாடப்புத்தகங்கள் வரும் என உடற்கல்வி ஆசிரியர்கள் எதிர் பார்த்திருந்தனர். ஆனால் 202425ம் கல்வியாண்டு வரையில் உடற்கல்விக்கு என தனியாக பாடப்புத்தகம் பள்ளிக்கல்வித்துறையால் வெளியிடப்படாமல் இருந்தது.

இந்த நிலையில் 2025ம் ஆண்டில் புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ள புத்தகத்தில் 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவர்களுக்கு உடற்கல்வியை எவ்வாறு சொல்லிக் கொடுப்பது என்பது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாணவர்கள் மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடத்தப்பெறும் விளையாட்டுப் போட்டிகளில்சிறந்துவிளங்கவும், பதக்கங்களை வெல்லவும், சாதனை உணர்வை மேம்படுத்தவும், தங்களின் உடல் வலிமையை எண்ணிப் பெருமை கொள்ளவும் இந்த பாடத்திட்டம் வழி வகுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடற்கல்வி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உடற்கல்வியை கற்றுத் தருவதற்கு, உடலைப் பற்றிய கல்வியறிவு, விளையாட்டுக்கல்வி, பாதுகாப்புக்கல்வி ஆகியவற்றை தெரிந்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் விளையாட்டுகள், பயிற்சிகள், ஆசனங்கள் மற்றும் மூச்சுப் பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது, அவர்களின் உடல் நிலை, சூழல் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்; பின்னர் செயல்பாடுகளைகற்றுக் கொடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தகவலுடன், விளையாட்டுகளை கற்றுத்தரும் முறைகள் இந்த பாடத்திட்டத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## சென்னையில் பள்ளி சிறுமியை, வடமாநில தொழிலாளி கடத்தினாரா? தமிழக அரசு விளக்கம்



சென்னை,

சென்னையில் வடமாநில தொழிலாளி ஒருவர் பள்ளி சிறுமியை கடத்தி செல்வதாக கூறி கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சி சமூக வலைத்தளங்கில் வேகமாக பரவிவருகிறது. இதுதொடர்பாக தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், " இந்த வீடியோ தமிழ்நாட்டில் எடுக்கப்பட்டது அல்ல. கடந்த மார்ச் மாதத்தில் இருந்து இந்திய அளவில் இந்த வீடியோ பரவி வருகிறது. இந்த சம்பவம் தமிழ்நாட்டில் நடக்கவில்லை என்று தமிழக போலீசும் மறுத்துள்ளது. தவறான தகவலை பரப்பவேண்டாம்" என்று கூறப்பட்டுள்ளது.



குளத்துப்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட காளிபாளையம் பகுதியில் நீண்ட நாட்களாக முடங்கிகிடந்த அரசு நூற்பாலையை சிப்கார்ட் நிறுவனம் கையகப்படுத்தியதை தொடர்ந்து ஊர் பொதுமக்கள் தொடர் போரட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் மேலும் போரட்டக்குழுவினருடன் விவசாய சங்கத்தினரும் இணைந்து போராடி வருகின்றனர். இதற்க்கான அலுவலகம் இன்று திறப்பு விழா செய்யப்பட்டது. இந்நிகழ்வில் ஊர் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர். மேலும் திருப்பூர் மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனுஅளிக்க உள்ளனர்.

## ரசிகர்களை என் சுயலாபத்திற்காக பயன்படுத்த மாட்டேன் நடிகர் அஜித்குமார்



சினிமாவில் 33 வருடங்களை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு நடிகர் அஜித்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

ஏனெனில், விடாமுயற்சி என்பதை வெறுமனே நான் கற்றுக் கொள்ளவில்லை. அதை பரிசோதித்து அவ்வண்ணமே வாழ்ந்து கொண்டு இருக்கிறேன். எண்ணில் அடங்காத அளவுக்கு வெற்றியும் தோல்வியும் சினிமாவில் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் என் வெற்றி மீது நான் சந்தேகம் கொள்ளும்போதும் உங்கள் அன்புதான் என்னை மீண்டு வர செய்துள்ளது. இந்த அன்புக்கு என்றும் உண்மையாக இருப்பேன். இந்த அன்பை எப்போதும் இறுகப் பிடித்திருப்பேன். ஆனால், என் பயணம் சினிமாவோடு முடிந்து விடவில்லை.


மோட்டார்ரேசிங்உலகில்வேறுவிதமானசவால்களைஎதிர்கொண்டேன். அந்த டிராக் நீங்கள் யார் என்பதை பொருட்படுத்தாது, மன்னிக்காது. அதற்கு தேவை Respect, Focus & Grit அந்த டிராக்கில் பல முறை ரத்தம் வரும் அளவுக்கு விபத்து ஏற்பட்டது. என்னை பலமுறை தூக்கி எறிந்திருக்கிறது. இருந்தாலும் தொடர்ந்து பயணிக்கிறேன். இந்த பயணம் விருதுகளுக்காகவோ அல்லது தலைப்பு செய்திகளுக்காகவோ அல்ல. ஒழுக்கம், துணிவு மற்றும் ஒரு குறிக்கோளுக்காக ஏற்படும் வலி என இவற்றின் மூலம் என்னை எனக்கே நிரூபிக்க பயணிக்கிறேன். வீரம் மிக்க நாட்டின் பிரதிநிதியாகவும் இருக்கிறேன்.

'அஜித்குமார் மோட்டார் ரேசிங்' என்ற பெயரில் 2025ம் ஆண்டு மீண்டும் விளையாட்டுத் துறைக்கு மட்டும் நுழையவில்லை. வயது வரம்பு, அச்சம், தடைகள் இதைப்பார்த்து தங்கள் மீதே சந்தேகம் கொள்பவர்களுக்கு உத்வேகம் கொடுக்கவும்தான் விளையாட்டுத் துறைக்குள் மீண்டும் வந்தேன். நான் இன்று என்னவாக இருக்கிறேனோ அதற்கு முக்கிய காரணம் என் ரசிகர்களின் அன்பும் ஆதரவும்தான். நன்றி! உங்கள் அன்பை என் சுயலாபத்திற்காகவோ அல்லது தவறாகவோ பயன்படுத்த மாட்டேன்.

சினிமாவில் எனக்கான பாதையை வடிவமைத்து வழிநடத்தி, என்னை நம்பி என் வளர்ச்சிக்கு உதவிய அனைத்து இயக்குநர்கள், நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள், பத்திரிகையாளர்கள், சாட்டிலைட் மற்றும் சமூக ஊடகங்கள், விமர்சகர்கள் அனைவருக்கும் நன்றி!

பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், தமிழகத்தின் மதிப்பிற்குரிய தலைவர்கள் மற்றும் பல்வேறு சத்தர்ப்பங்களில் எனக்கு அன்பாக இருந்த அதிகாரிகளுக்கும் நான் நன்றி கூறுகிறேன். எனக்கு மதிப்புமிக்க பத்ம பூஷண் விருது வழங்கி, எனது சமூக மரியாதை மற்றும் பொறுப்பை மேலும் பலப்படுத்தியதற்காக இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய அரசுக்கு நன்றி கூறுகிறேன். என் வாழ்வின் பலம் மனைவி ஷாலினிதான். எல்லா தருணங்களிலும் அவர் என்னுடன் நின்றிருக்கிறார். என் குழந்தைகள் அனோஷ்கா மற்றும் ஆத்விக் இருவரும் என் வாழ்விற்கு அர்த்தம் கொடுத்தவர்கள். சமூகத்தின் மீது அக்கறை கொள்ளும் மனப்பான்மையுடன் என்னை வளர்த்த மறைந்த என் தந்தை பி.எஸ். மணி மற்றும் என் அம்மா மோகினி மணி என் சகோதரர் மற்றும் என் குடும்பத்தினர் அனைவரின் ஆதரவிற்கும், அன்பிற்கும் நன்றி. என் நிறை, குறைகள் அனைத்தையும் இந்த 33 வருடங்கள் ஏற்றுக்கொண்டு என் மீது அன்பு வைத்து கொண்டாடியதற்கு நன்றி! உங்களுக்கும் எனக்கும் என்றென்றும் உண்மையாக இருக்க முயற்சிப்பேன். என் மோட்டார் ரேசிங் கரியருக்கும் உங்கள் அன்பும் ஆதரவும் தேவை. உங்களையும் நம் நாட்டையும் பெருமைப்படுத்துவேன் என நம்புகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ரஜினிகாந்த் பயன்படுத்திய 1421 பேட்ஜ் நம்பரின் அர்த்தம் என்ன..? லோகேஷ் கனகராஜ் விளக்கம்



லோகேஷ்கனகராஜ் இயக்கத்தில் ரஜினிகாந்த், ஆமீர்கான், நாகார்ஜுனா உள்ளிட்ட பலர் நடித்துள்ள 'கூலி' படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் இன்று நடைபெற்றது. அனிருத் இசையமைத்துள்ள இந்தப் படம் வரும் 14ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.


இந்நிலையில் இசை வெளியீட்டு விழாவில் பங்கேற்ற இயக்குநர் லோகேஷ் கனகராஜ் பேசுகையில், "இந்தப் படம் வெளியாகி ஒரு வாரத்துக்கு சவுபின் ஷாயிர் தான் பேசுபொருளாக இருப்பார். கன்னட நடிகர் உபேந்திரா இந்தப் படத்துக்காக நிறைய செய்திருக்கிறார். நடிகர் நாகார்ஜுனாவை பார்த்து தான் நான் பங்க் வைக்க ஆரம்பித்தேன். ரஜினிசாரைப் பற்றி இந்த மேடை பேச ஒரு மணி நேரம் பத்தாது. ஆனால் நேரம் காரணமாக குறைவாக பேசுகிறேன்.

என்னுடைய வாழ்க்கை மாற்றம், நிதானம், அமைதி ஆனதுனா அதுக்கு காரணம் ரஜினிகாந்த் சார்தான். ரஜினிகாந்த் சார் பழைய படங்களில் கையில் இருக்கும் பேட்ஜ் 777 இருக்கும், 786 என இருக்கும். இந்த படத்தில் 1421 என கையில் பேட்ஜ் வைத்தேன். ஒருநாள் ரஜினிகாந்த் சார் அழைத்து கேட்டார். அது என்ன 1421? அதில் எதாவது இருக்கா என கேட்டார்.

அது என்னுடைய அப்பாவின் கூலி எண். என்னுடய அப்பா பஸ் கண்டக்டர் என சொன்னேன். உங்க அப்பா கண்டக்டர் என்பதை ஏன் சொல்லவில்லை என்றார். ஒருநாள் நீங்கள் கேட்பீர்கள் அது மறக்க முடியாத நினைவாக ஆக இருக்கும் என நினைத்தேன்.

என் அப்பா பஸ் கண்டக்டர், அவரோட நம்பர் 1421, அதை நான் ரஜினி சாருக்கு பயன்படுத்திகிட்டேன் என் அப்பாவோட நம்பரை ரஜினி சாருக்கு பயன்படுத்தி இருப்பது என் அப்பாவுக்கு ஒரு Tribute ஆக இருக்கும்" என்றார்

## மக்காவ் ஓபன் பேட்மிண்டன்: சாம்பியன் பட்டம் வென்ற இந்தோனேஷிய வீரர்



மக்காவ் ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி மக்காவ் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி இன்று நடைபெற்றது. இதில் இந்தோனேஷியாவின் அல்வி பர்ஹான் மற்றும் மலேசியாவின் ஜஸ்டின் ஹோ ஆகியோர் மோதினர்.

இந்த மோதலில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய இந்தோனேஷியாவின் அல்வி பர்ஹான் 2115, 215 என்ற செட் கணக்கில் ஜஸ்டின் ஹோவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார்.

## கணவரை பிரிந்து வாழும் முடிவை கைவிட்ட சாய்னா நேவால்




இந்திய பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவால் (வயது 35). இவர் பேட்மிண்டனில் உலகின் நம்பர் 1 வீராங்கனையாக திகழ்ந்துள்ளார். மேலும், ஒலிம்பிக்கில் வெண்கலம், உலக சாம்பியன்ஷிப்பில் 1 வெள்ளி, 1 வெண்கலம் என பல்வேறு பதக்கங்களை வென்றுள்ளார். 2023ம் ஆண்டு சர்வதேச பேட்மிண்டன் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக சாய்னா அறிவித்தார். இதனிடையே, சாய்னா நேவாலுக்கும் முன்னாள் இந்திய பேட்மிண்டன் வீரரான பாருபள்ளி காஷ்யப் என்பவருக்கும் கடந்த 2018ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இருவரும் ஐதராபாத்தில் வசித்து வந்தனர்.

இந்நிலையில், 7 ஆண்டுகால திருமண வாழ்க்கை முடிவுக்கு வருவதாக கடந்த 3 வாரங்களுக்கு முன்பு சாய்னா நேவால் அறிவித்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்டிருந்த இன்ஸ்டாகிராம் பதிவில், இருவரும் வெவ்வேறு பாதையில் பயணிக்க முடிவு செய்து பிரிவதாக அறிவித்திருந்தார். இது ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. அதேநேரத்தில், சாய்னா நேவாலின் பிரிவு குறித்த கருத்துக்கு பாருபள்ளி காஷ்யப் எந்தப் பதிலும் தெரிவிக்கவில்லை.

இந்த சூழலில், தற்போது தனது முடிவைக் கைவிடுவதாக சாய்னா நேவால் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக தனது கணவர் பாருபள்ளி காஷ்யப்புடன் இருக்கும் புகைப்படத்தை, தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ள சாய்னா நேவால், 'சில நேரங்களில் தூரம் என்பது ஒருவர் நம் வாழ்வில் இருப்பதன் மதிப்பை புரிய வைக்கிறது' என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம் மீண்டும் தங்களது உறவை, கட்டமைக்க முயற்சிப்பதாகவும் சாய்னா தெரிவித்துள்ளார்.

## வெற்றி பெறப்போவது யார் ? பரபரப்பான கட்டத்தில் ஓவல் டெஸ்ட்



இந்தியா இங்கிலாந்து அணிகள் மோதும் 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 224 ரன்களில் சுருண்டது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 247 ரன்கள் எடுத்தது. இது இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோரை விட 23 ரன்கள் கூடுதலாகும். 23 ரன்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய இந்தியா 396 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதனால் இங்கிலாந்து அணிக்கு 374ரன்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ந்து 374ரன்கள் இலக்குடன் இங்கிலாந்து அணி 2வது இன்னிங்சில் விளையாடியது தொடக்கம் முதல் பென் டக்கெட் , ஜாக் கிராலி இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர் . தொடக்க விக்கெட்டுக்கு 50 ரன்கள் சேர்த்த நிலையில் ஜாக் கிராலி 14 ன்களுக்கு முகமது சிராஜ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இறுதியில் நேற்று 3வது நாள் முடிவில் இங்கிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 50 ரன்கள் எடுத்தது .

இந்நிலையில், நான்காம் நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. பென் டக்கெட் அரை சதம் கடந்து 54 ரன்னில் அவுட்டானார். ஆலி போப் 27 ரன்னில் வெளியேறினார். ஜோ ரூட் உடன் ஹாரி புரூக் இணைந்தார். இந்த ஜோடி நிதானமாக ஆடியது. இருவரும் சதம் கடந்தனர். 4வது விக்கெட்டுக்கு 195 ரன்கள் சேர்த்த நிலையில் ஹாரி புரூக் 111 ரன்னில் அவுட்டானார். ஜோ ரூட் 105 ரன்னில் வெளியேறினார். மழை காரணமாக ஆட்டம் சிறிது தடைபட்டது.

இறுதியில், நான்காம் நாள் முடிவில் இங்கிலாந்து 6 விக்கெட்டுக்கு 339 ரன்கள் எடுத்துள்ளது. அந்த அணி வெற்றிபெற 35 ரன்கள் தேவை. இந்தியா வெற்றிபெற 4 விக்கெட்டுகள் மட்டுமே தேவை என்பதால் நாளை நடைபெறும் கடைசி நாள் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.